(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 8.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2010, மே 20, வியாழக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0014/'10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) வருடாந்த அடிப்படையில், இற்றைவரை கடந்த 10 ஆண்டுகளுக்கான -

(i) இராணுவத்திலுள்ள ஆளணியினரின் எண்ணிக்கையினையும்,

(ii) சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளிற்கென ஏற்பட்ட செலவினையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) கடந்த 5 வருடங்களில் இராணுவத்திற்கேற்பட்ட மொத்த மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினத்தை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஒரு படையணியில் அல்லது குழுவில் உள்ள இராணுவ ஆளணியினரின் எண்ணிக்கையினையும்,

(ii) நிலைப்படுத்தப்பட்ட படையினரின் எண்ணிக்கையினை மாகாண அடிப்படையிலும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0015/'10

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2008 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை நாடு முழுவதிலும் வருடாந்தம் இடம்பெற்றுள்ள வாகன விபத்துக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அவற்றுள் மரணம் சம்பவித்த வாகன விபத்துக்களின் எண்ணிக்கை மற்றும் சாதாரண வாகன விபத்துக்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(iii) இந்த வாகன விபத்துக்களில் மிக வேகமாக ஓட்டியதனால் மற்றும் மதுபானம் அருந்தியதன் காரணமாக சம்பவித்துள்ள விபத்துக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) இந்த விபத்துக்களினால் உயிரிழந்த, மற்றும் காயமடைந்த அல்லது அங்கவீனமுற்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வாறு நாடு முழுவதிலும் ஏற்படும் வாகன விபத்துக்களை தவிர்ப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0016/'10

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) இன்றுவரை கடந்த 10 ஆண்டுகளுக்கான வருட அடிப்படையில் -

(i) விமானப்படை ஆளணியினரின் எண்ணிக்கையினையும்,

(ii) சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட செலவினையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கடந்த ஐந்து ஆண்டுகளிற்கான விமானப்படைக்கான மொத்த மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவுகளை வருட அடிப்படையில் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஒரு படையணியிலுள்ள அல்லது குழுவிலுள்ள விமானப்படை ஆளணியின் எண்ணிக்கையினையும்,

(ii) நிலைப்படுத்தப்பட்ட எண்ணிக்கையினை மாகாண அடிப்படையிலும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## அனுதாபப் பிரேரணை

1.

காலஞ்சென்ற முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ றிச்சட் பத்திரண.

2.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பியதாஸ ஹரிஸ்சந்திர.

3.

காலஞ்சென்ற முன்னாள் செனட் சபை உறுப்பினர் கௌரவ டிக்சன் சில்வா ஹெங்காவிதாரண.

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2010 யூன் மாதம் 08 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஒகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம்,— நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் (ஒம்புட்சுமன்) சம்பளம், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 156 (3) உறுப்புரையின் வண்ணம் 2009.01.01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு நடைமுறைக்கு வருமாறு அமைய வேண்டுமென இப் பாராளுமன்றத்தினால் இத்தால் குறித்துரைக்கப்படுகின்றது.

நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்சுமன்) - ரூ. 65,000 /=

மேலும், இந்த மாதாந்த சம்பளத்துள் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வீட்டு வாடகைப் படியும் உள்ளடக்கப்பட்டுள்ளதாதலால், நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஓம்புட்சுமன்) வீட்டு வாடகைப் படியும் அடங்கலாக ரூ. 65,0000/= மாதாந்த சம்பளத்திற்குப் புறம்பாக, 2009.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிற படிகளைப் பெறுவதற்கு உரிமை இல்லையெனவும் இந்தப் பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.